# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# ஆரையாண்டுப் பரீட்சை 2023

ஆண்டு: 8 திகதி: 17.06.2023

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி சத்தியதேவி பாலகெங்காதரன்

மாணவர் பெயர்: ________________________________

| **வினாக்கள்** | **வினா புள்ளி** | **பெற்ற புள்ளி** |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 15 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 15 | |
| வினா 7 | 15 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

– BLANK PAGE –

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்துதுக் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

பட்டம் விடுவது ஆசிய மக்களின் விருப்பமான பொழுது போக்காகும். இந்த விளையாட்டுக்கு விதி முறைகள் இல்லை. அதிகமான பொருள்களும் தேவையில்லை. தேவையானவை ஒரு பட்டம், சிறிதளவு நூல், காற்று. கடற்கரையோரத்தில் நின்று பட்டம் விடுவதில் சிறுவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் மகிழ்ச்சிதான். பட்டம் விடுவது பாரம்பரிய விளையாட்டு மட்டுமல்ல, இதைப்பற்றிய பாரம்பரிய கதைகள் பலவும் உண்டு.

மலேசிய நாட்டில் போர்க்காலத்தில் பட்டம் எப்படி வீரர்களுக்கு கைகொடுத்தது என்பது பற்றிய கதை உங்களுக்கு தெரியுமா? ஒரு சமயம் எதிரிகள் தங்கள் முகாமை நோக்கி வரும்போது போர்வீரர்கள் பட்டங்களை உயரப் பறக்கவிட்டனர். பட்டங்கள் ஒன்றோடு ஒன்று உரசும் சத்தம் கேட்டதும் எதிரிகள் ஓடிவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஜப்பான் நாட்டில் பட்டங்களுக்கு "காற்றுடன் சண்டை செய்பவர்கள்" என்ற பெயரும் உண்டு. காரணம் ஒரு காலத்தில் மக்கள் ஒருவரையொருவர் வெட்டிக் கொண்டு மாண்டனர். இதைத் தடுக்க விவேகமுள்ள அரசர் ஒருவர் அருமையான யோசனை ஒன்று சொன்னார். "இனி நீங்கள் வாள் எடுத்துச் சண்டை சண்டை செய்ய வேண்டிய அவசியமில்லை. பட்டங்களை பறக்கவிட்டுச் சண்டை போடுங்கள்" என்றார். மக்கள் வாள் எடுப்பதை மறந்து பட்டங்களைப் பறக்க விடுவதில் மூழ்கினர்.

பழங்காலத்துச் சீன மன்னர்கள் பட்டங்களைப் பலவழிகளிலும் பயன்படுத்தினர். குறிப்பாக அவற்றின் பங்கு போர்க்காலங்களில் அதிகமாக இருந்தது. பெரிய பட்டங்களைச் செய்து அவற்றில் மூங்கிலால் செய்யப்பட்ட புல்லாங்குழலை பொருத்திக் காற்றில் பறக்கவிடுவார்கள். பட்டங்கள் காற்றில் பறக்கும்போது பல விதமான ஒலிகளை எழுப்பும். அந்த ஒலிகள் எதிரிகளின் மறைவிடங்கள் மிக அருகில் உள்ளன என்பதைத் தெரிவிக்கும் ஓர் அடையாளமாகக் கருதப்பட்டது. உயரப் பறக்கும் பட்டங்களைப் பார்க்கும் போது இந்தப் பாரம்பரிய கதைகள் உங்கள் நினைவுக்கு வரும் அல்லவா?

பட்டம் விடுவதற்கு தேவையான பொருள்கள் என்ன? (3 புள்ளி)

______________________________________________

மலேசியா நாட்டில் போர்வீரர்கள் பட்டங்களை எப்போது பறக்கவிட்டனர்? (2 புள்ளி)
ஜப்பான் நாட்டு விவேகமுள்ள அரசரின் யோசனை என்ன? அரசர் எதைத் தடுத்தார்? (4 புள்ளி)

______________________________________________

சீன நாட்டில் போர்க்காலங்களில் பட்டங்கள் எழுப்பும் ஒலிகளின் பொருள் எதன் அடையாளமாகக் கருதப்பட்டது? (4 புள்ளிகள்)

______________________________________________________________________________

பட்டம் விடுவது பற்றிய உனது கருத்தையோஅனுபவத்தையோ 20 சொற்களுக்கு குறையாது எழுதுக.(7 புள்ளி)

______________________________________________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொற்களை எழுதி நிரப்புக.

இவர்கள் மிகவும் புகழ்பெற்ற விளையாட்டாளர்கள். இவர்கள் எப்போதும் ஒன்றாகச் சேர்ந்து உடற்பயிற்சி_____________. உடற்பயிற்சி செய்யும் இவர்கள்_________ இறுக்கமாக அணியமாட்டார்கள். இவர்கள் சாப்பாட்டிற்குப்பின் இரண்டுமணி நேரம் கழித்தே உடற்பயிற்சி _____________. உடற்பயிற்சிக்கு முன்னும் பின்னும் தேவையான அளவு தண்ணீர் ___________. அதிகக் களைப்பு எடுக்கும்போது ஓய்வு ______________. இவர்கள் மிகக் கட்டுப்பாடான உணவுப் பழக்கத்தைப் பின்பற்றுகிறார்கள்.

மீனா தன் உடல்நலத்தில் அதிக அக்கறை உடையவள். அவள் வாரம் ஒருமுறை தன் நகங்களை__________தினமும் சுத்தமாக தேய்த்துக் ___________ ஒரு நாளைக்கு இருமுறை தன் பற்களை _____________ தூய்மையான ___________ அணிவாள்; தலைமுடியை நன்கு வாரிச் சடை __________ நல்ல சத்துள்ள__________ மட்டுமே உண்பாள். அவள் தினந்தோறும் தவறாது உடற்பயிற்சியும் செய்வாள்.

| வினா இல | 3 | புள்ளிகள் | 20 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

பின்வரும் சொற்களை வைத்து வாக்கியங்கள் எழுதுக.

1 வணக்கம்:______________________________________________________________

2 மரங்கள்: ______________________________________________________________

3 உடற்பயிற்சி: ____________________________________________________________

4 சல்லிக்கட்டு ______________________________________________________________

5 இளைஞர்கள்: ____________________________________________________________

6 பாரதியார்: ______________________________________________________________

7 தைப்பொங்கல்: ___________________________________________________________

8 தமிழ்மொழி: _____________________________________________________________

9 அவுஸ்திரேலியா: _________________________________________________________

10 காலைநேரம்: ____________________________________________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக.

1 வாணி நீர்வாழ் உயிரினக் காட்சிச் சாலைக்குச் சென்றாள்.

2 அவள் நுழைவுச் சீட்டைப் பெற்றாள்.

3 அவள் மீன்போன்ற பல்வேறு உயிரினங்களைப் பார்த்தாள்.

4 அவள் சில காட்சிப் பொருள்களையும் பொம்மைகளையும் வாங்கினாள்

5 அவள் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினாள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |

பின்வருவன வற்றில் ஒன்றைப்பற்றி 70 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் எழுதுக.

தமிழ்ப்பள்ளியில் அல்லது வீட்டில் கொண்டாடி மகிழ்ந்த தைப்பொங்கல் பற்றி உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக.

உங்களுக்குப் பிடித்த கல்விச் சுற்றுலா ஒன்றைப்பற்றி உங்கள் நண்பருக்கு கடிதம் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 6 | புள்ளிகள் | 25 | பக்கம் | 6 |

கீழேயுள்ள தலைப்புகளில் ஒன்றைக் தெரிந்து எடுத்து 130 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1 எனக்குப் பிடித்த விளையாட்டு
2 எனது உடல் நலத்தை வளர்க்க நான் செய்யும் செயல்கள்.

வினா இல